# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## OS.No.37/2023

## வழக்கு சாட்சி PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **கருப்பணன்** | தொழில் | : தோட்டத்து வேலை செய்து வருகிறேன். |
| தகப்பனார் பெயர் | : ஆறுமுகம் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : தாண்டிக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 65/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 12.02.2026 |

<u>**முதல் விசாரணை :**</u>

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2ம் சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும் . கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

<u>**1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்குத்தெரியும். நான் தாண்டிக்குடி வசித்து வருவதாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது ஆதார் அடையாள அட்டையின் நகலை தாக்கல் செய்துள்ளேன். வாதி நாகமணி அழைத்ததன்பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நாகமணி எனது பக்கத்து வீட்டைச்சேர்ந்தவர். நானும், நாகமணியும் வெவ்வேறு

சமூகத்தைச்சேர்ந்தவர்கள். நாகுப்பிள்ளை காணவில்லை என்றுச்சொல்லி வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் . நாகுப்பிள்ளை காணமால்போன தேதி எனக்கு குறிப்பிட்டு தெரியவில்லை. ஆனால் அவர் காணாமல்போகி சுமார் 15 வருடங்கள் ஆகிறது. நாகமணி எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன்பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நாகுப்பிள்ளை பெயரில் சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது . நாகுப்பிள்ளை சொத்துக்களை நாகமணி அபகரிக்கவேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அவரது வழக்கிற்கு ஏதுவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.12 14:36:36 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.